19 JAN 1956
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Wednesday, 28th September 1955.

The House met in the Assembly Chamber, Government Estate, Mount Road, at eleven of the clock, Mr. Speaker (THE HON. SRI N. GOPALA MENON) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Particulars of zamins and inams taken over

* 2475 *Q.*—SRI N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of zamins and inams that have been taken over by the Government under the Zamindari Abolition Act;

(*b*) the number of zamins and inams that have not yet been taken over by the Government; and

(*c*) the total compensation paid to zamindars and inamdars for the same?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) *to* (*c*) The answer[a] is placed on the table of the House.

SRI N. K. PALANISAMY: ஸார், இதில் ஒரு ஜமீன்தான் இருக்கிறது. மற்ற 70 இனும்களையும் எடுத்துக் கொள்வதற்கு இன்னும் நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை என்று இருக்கிறது. ஏன் இது வரையிலும் நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை? அதற்குக் காரணம் என்ன என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: கனம் அங்கத்தினர் கேட்கும் கேள்வி சரியாக விளங்கவில்லை. அதாவது எந்த எஸ்டேட்டுக்கு நோட்டீஸ் கொடுக்கவில்லை என்பது.

SRI N. K. PALANISAMY: அதில் ஒரு ஜமீன்தான் இருக்கிறது.

THE HON. SRI M. A. MANICKAVELU: அது பரிசீலனையில் இருக்கிறது.

SRI R. V. SWAMINATHAN: May I know whether the Government have received any representations from the President of the Ryots' Association, Tirunelveli district, for the amendment of the Estates Abolition Act so as to enable the Government to bring all inam estates under the purview of that Act?

THE HON. SRI M. A. MANICKAVELU: Yes, Sir. Representations have been received and they are being examined.

SRI R. V. SWAMINATHAN: In view of the difficulties experienced by the inam ryots, may I know whether the Government really propose to bring all the inam villages under the purview of the proposed amending legislation?

---

[a] Printed as Appendix I on page 444 infra.

[28th September 1955

THE HON. SRI M. A. MANICKAVELU : There is a proposal to bring all inams—minor inams and 1936 inams also—under the Estates Abolition Act. But the financial implication of the proposal is very great and that is why the Government are examining it very carefully.

SRI R. V. SWAMINATHAN : Sir, on a point of order. The Hon. Minister while answering a supplementary question put a question to the hon. Member. I wish to know whether the Hon. Minister is right in putting a question to the hon. Member who put it. If the Hon. Minister wants to get answers from hon. Members, I am prepared to answer his question.

THE HON. SRI M. A. MANICKAVELU : It is not an interrogation. It is one way of expressing things most emphatically.

SRI M. PALANIYANDI : ஸார், இந்த ஜமீன் ஒழிப்புச் சட்டம் வந்து ஏழு வருஷங்களாகியும் கனம் அமைச்சர் அவர்கள் இன்னும் யோசித்துக்கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார். ஏழு வருஷங்கள் யோசித்துக்கொண்டிருந்தும் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார். ஜமீந்தார்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கு கால தாமதம் ஆனாலும் இனாம்களுக்குக் கொடுத்துவிடக் கூடாதா ? அங்கு இதனால் தொழிலாளர்களுக்குள் மோதல் ஏற்படுகின்றது. அதைத் தவிர்க்க உடனடியாக சட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று கேட்கிறேன்.

THN HON. SRI M. A. MANICKAVELU : அந்த இனாம்களில் இருக்கக்கூடிய ரயத்துகளுக்கு யாதோர் தொந்தரவும் இடைஞ்சல்களும் இருக்கக் கூடாது என்பதற்காகவும் எந்தக் கேள்வியும் எழக் கூடாது என்பதற்காகவும் உடனடியாக சட்டம் கொண்டுவர வேண்டும் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

SRI S. RAMALINGAM : சர்க்கார் கொடுத்திருக்கும் அறிக்கையில் 70 இனாம்களை சர்க்கார் இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏன் அவைகளை இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை ? இப்பொழுது அவைகளை எடுத்துக் கொள்வதற்கு சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கிறார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. சில எஸ்டேட்டுகளை எடுத்துக்கொள்ளாத காரணம் அவைகள் கோர்ட்டு விவகாரங்களில் இருக்கின்றன. சில பரிசீலனையில் இருக்கின்றன. ஆகையினால் கூடிய சீக்கிரத்தில் மற்ற எஸ்டேட்டுகளையும் எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

SRI K. T. RAJU : ஸார், இனாம்களை எடுத்துக்கொள்வதற்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்றால் கோடிக் கணக்கான ரூபாய் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது, அதனால் கால தாமதம் ஆகிறது என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார். கோடிக் கணக்காக கொடுக்காமல் லட்சக் கணக்காகக் கொடுப்பதற்கு நஷ்ட ஈட்டைக் குறைத்துக்கொள்வார்களா ? அப்படிக் குறைத்துக்கொண்டால் சீக்கிரத்தில் கொடுத்துவிடலாம் அல்லவா ? அதனால் லட்சக் கணக்காக கொடுக்கவேண்டும் என்று தொகையை குறைத்துக் கொண்டு அந்த நிலைமையில் அவைகளை எடுத்துக்கொள்ளலாம் அல்லவா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் கணக்கிட்ட புள்ளி விவரம் சரியாக இருக்கலாம். கான்ஸ்டிடியூஷன் மற்றும் அது, இது எல்லாம் இருக்கின்றன. அதையெல்லாம் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது.

28th September 1955]

SRI N. K. PALANISAMY: இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அதிகப்படியான பணம் வேண்டியதாக இருக்கிறது. ஆகவே ஜமீந்தார்களுக்கும் இனாம்தார்களுக்கும் பணம் கொடுக்க வேண்டியதற்கு பதிலாக அவர்களுக்கு 30 வருஷம் கழித்து பணம் கொடுப்பதாக பாண்டுகள் எழுதிக் கொடுக்க சர்க்கார் ஆலோசனை செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்தப் பிரச்னையைப்பற்றி வெகு தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது. ரிவினியூ போர்டிலிருந்து அதைப்பற்றிய ரிபோர்ட்டு வெகு சீக்கிரத்தில் வரும். அது வந்த பிறகு அதை கவனிக்கப்படும்.

SRI M. S. SELVARAJAN: ஸார், பலவித லோகல் டெவலப்மெண்ட் வேலைகளை பல இடங்களில் எடுத்து நடத்துகிறார்கள். அங்கெல்லாம் இனாம் நிலங்கள் குறுக்கிடுகின்றன. அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற பிரச்னை எழுந்தால் நஷ்ட ஈட்டை அங்குள்ள கிராமத்தார் கொடுக்க தயாராக இருக்கிறார்கள். அந்த நிலங்களை சர்க்கார் எடுத்துக் கொண்டு உடனடியாக லோகல் டெவலப்மெண்ட் வேலைகளைச் செய்வதற்கு ஏதாவது உதவி செய்ய சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அதைப்பற்றிய ரிபோர்ட் சீக்கிரம் வர இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்த பிறகு கனம் அங்கத்தினர் சொன்ன யோசனையையும் கவனிக்கலாம்.

SRI K. V. RAMASWAMI: கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது (Constitution) கான்ஸ்டிடியூஷன் மற்றும் அது, இது எல்லாம் இருக்கிறது என்று பதில் சொன்னார். அது, இது என்றால் என்ன என்பது புரியவில்லை. அதை விளக்குவாரா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: நான் சொன்னதெல்லாம் கனம் அங்கத்தினருக்கு நன்றாகப் புரிந்திருக்கிறது. ஏதோ கேள்வி கேட்க வேண்டுமென்பதற்காக தமாஷாவாக கேட்கிறார்.

Notifying of Erumanur village under the Zamin Abolition Act

* 2476 *Q.*—SRI P. RANGASWAMI REDDIAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) when Erumanur village, South Arcot district, was notified to come under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948;

(*b*) the amount fixed by the Government and collected from the ryots after the notification;

(*c*) whether the village has been surveyed and the kist settled for the village and if so, when;

(*d*) on what basis the basic annual sum was fixed for the purpose of awarding compensation to the landholders; and

(*e*) what the basic sum was?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) *to* (*e*) The answer[a] is placed on the table of the House.

[a] Printed as Appendix II on page 445 infra.